முருகப்பெருமான் துணை

**மகான் முத்தானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.04.2024**, சனிக்கிழமை

1. வள்ளலே ஞான தேசிகனே
   வரம்தரும் ஆறுமுக அரங்கனே
   வல்லமை மிக்க உன்பெருமை கூறி
   வழங்குவேன் துல்லிய ஆசிதனை
2. ஆசிதனை சோபகிருது சேல் திங்கள்
   அறிவிப்பேன் அறுநான்குதிகதி காரிவாரம்
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 24 ம் நாள், 06.04.2024, சனிக்கிழமை)
   ஆசிதனை முத்தானந்தர் யானும்
   அகிலமே நலம் காண உரைப்பேன்
3. உரைக்கவே ஞானிகளை வணங்கும்
   உயர்வான வழிமுறைகள்தனை
   குறைவின்றி அருளும் ஞானி
   குருவரங்கன் ஆசிதனை ஏற்று
4. ஏற்று கலியுக மக்களெல்லாம்
   ஏழாம்படை வீடாம் அரங்கனின்
   ஆற்றல்மிக்க பிரணவக்குடிலுக்கு
   அனைவரும் வந்து சரணாகதி
5. சரணாகதி கண்டு விட
   சகலதும் உன் வசமே என
   சரணாகதி முழுமைபட கொண்டு
   சன்மார்க்க நெறி வழியில்
6. வழிதனில் பிசகா நடப்போமென
   வல்லமைபட உறுதி ஏற்று
   பழிபாவச் செயல்களை விட்டு
   பண்பானவர்களாக தயவு நெறிபட
7. தயவு நெறிபட எவ்வுயிர்தனக்கும்
   தீங்குதரா வாழ்வோமென
   நேயமிக்க சத்தியங்கள் செய்து
   நீதிமான் அரங்கன் பதம் பற்றிவிட

8. பற்றிவிட பாவ வினை ஒழியும்
பந்தபாச சுயநல பற்றும்
பற்றும் விலகி உலக சேமம்
பார்க்கின்ற காக்கின்ற பக்குவம்

9. பக்குவமும் குருவருளால் தேறி
பாருலகில் தன் பிறவி நோக்கம்
ஆக்கமுடன் விளங்கப் பெற்று
அறிவுத் தெளிவு ஆற்றல்கூடி

10. கூடியே அழியாமை தேடுகின்ற
குருவருள் திருவருள் சூட்சுமமும்
நாடியே சகல வகைதனிலும்
ஞான பலமும் தருமபலமும் இணைத்து

11. இணைத்து இனி பிறவாதபடி
ஈதூழே தேற்றம் கண்டுமே
துணைவர அரங்கன் தயவுபட
தொண்டரெலாம் ஞானிகளாக நேரும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–